**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 90/2022**

| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|---|---|
| NAME | நித்தியானந்தம் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 17.09.2025.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. நான் விவசாயம் செய்து வருகிறேன். தாவா சொத்தில் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண்.1, 9 மூங்கம்பட்டு கிராமத்தில் உள்ளது. மொத்த விஸ்தீரணம் 2.5 ஏக்கர். சர்வே எண்.1–ல் மொத்த விஸ்தீரணம் 99 செண்ட், சர்வே எண்.9–ல் 1 ஏக்கரா 35 செண்ட். ஒவ்வொரு சர்வே எண்ணிலும் எனக்கு எவ்வளவு பாத்தியப்பட்டது என சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும். சர்வே எண்.1–ல் எனக்கு 99 செண்ட் வர வேண்டும், சர்வே எண்.9–ல் எனக்கு 1.35 ஏக்கர் வர வேண்டும்.

2. இந்த சர்வே எண்.1 மற்றும் 9 சம்மந்தப்பட்ட சொத்துக்கு மட்டும் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். மற்ற சொத்துக்கள் குறித்து இந்த வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.1–ல் உள்ள 94 செண்ட்டிற்கு செக்குபந்தி பொது வண்டி பாதைக்கு கிழக்கு, கிருஷ்ணமூர்த்தி செட்டியார் நிலத்திற்கு வடக்கு, ஆறுமுகம் பண்டிதர் நிலத்திற்கு மேற்கு, இதே சர்வே எண் கஜேந்திரன் நிலத்திற்கு தெற்கு. 5 செண்டிற்கு செக்குபந்தி கிருஷ்ணமூர்த்தி செட்டியார் நிலத்திற்கு கிழக்கு, கஜேந்திரன் நிலத்திற்கு வடக்கு, ஆறுமுகம் பண்டிதர் மற்றும் கஜேந்திரன் நிலத்திற்கு மேற்கு, என்னுடைய நிலத்திற்கு தெற்கு.

3. சர்வே எண்.9–ல் உள்ள 1.35 செண்ட்டிற்கு செக்குபந்தி கிருஷ்ணமூர்த்தி செட்டியார் நிலத்திற்கு வடக்கு மற்றும் கிழக்கு, விஜயம்மாள் மற்றும் முனியம்மாள் நிலத்திற்கு மேற்கு, இதே சர்வே எண் கஜேந்திரன் நிலத்திற்கு தெற்கு. சர்வே எண்.1–ல் மொத்த விஸ்தீரணம் 1.45 ஏக்கர். சர்வே எண்.9–ல் மொத்த விஸ்தீரணம் 2.70 ஏக்கர். இரண்டு சர்வே எண்ணுக்கும் பட்டா வாங்கிவிட்டேனா என்றால் வாங்கி விட்டேன். நான் கூறிய விஸ்தீரணம் தவறு என்றால் சரியல்ல. உண்மையான விஸ்தீரணம்

சர்வே எண்.1–க்கு 12.8 ஏக்கர் மற்றும் சர்வே எண்.9–க்கு 9.9 ஏக்கர் என்றால் சரிதான்.

4. நான் கிரயம் வாங்கிய அசல் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வாங்கிய சொத்து ஆரம்பத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் வெங்கடேசன் செட்டியாருக்கு பாத்தியப்பட்டது. நான் அவரிடம் இருந்து கிரயம் வாங்கினேனா என்றால் இல்லை அவரது மகளிடம் இருந்து கிரயம் வாங்கினேன். வெங்கடேசன் செட்டியார் எப்போது இறந்தார் என்றும் அவருக்கு எத்தனை வாரிசுகள் என்றும் நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. எனக்கு நேரடியாக வெங்கடேசன் செட்டியாருக்கு எத்தனை வாரிசு என்று தெரியாது என்றால் சரியல்ல தெரியும் 3 பேர், சத்தியவதி, பத்மாவதி மற்றும் மதுபாலா ஆகியோர் வாரிசு. வாரிசு சான்று போட்டால் தான் எத்தனை வாரிசு என தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வெங்கடேசன் செட்டியாரின் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எப்போது இறந்தார் என்று தெரியாது. இதே சொத்து எனக்கு உரிமையானது என்று வெங்கடேசன் செட்டியாரின் தம்பி கிருஷ்ணமூர்த்தி வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி இறந்தபிறகு அவரது மகன் சத்தியமூர்த்தி வழக்கு நடத்துகிறார் என்றால் சரிதான்.

6. கிருஷ்ணமூர்த்தி சொத்து என்னுடையது என்றும் அவர் அனுபவிப்பதாகவும் வழக்கு போட்டுள்ளார் என்றால் சத்தியமூர்த்தி தான் வழக்கு போட்டுள்ளார் கிருஷ்ணமூர்த்தி போடவில்லை சத்தியமூர்த்தியும் சொத்து வேண்டும் என்று தான் வழக்கு போட்டுள்ளார். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து குறித்து வெங்கடேசன் செட்டியாருக்கும் அவரது தம்பி கிருஷ்ணமூர்த்தி செட்டியாருக்கும் இன்னும் பாகம் பிரியவில்லை என்றால் சரியல்ல, பாகம் பிரித்துக்கொண்டார்கள். எப்போது பிரித்தார்கள் என்று ஞாபகமில்லை.

7. வெங்கடேசன் செட்டியாருக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றால் பாகப்பிரிவினை ஆவணத்தின் மூலம் அவருக்கு வந்த சொத்து. பதிவு செய்யப்பட்ட ஆவணம் எந்த ஆண்டு என்று ஞாபகமில்லை. பாகப்பிரிவினை ஆவணத்தில் எந்த அட்டவணை சொத்து வெங்கடேசன் செட்டியாருக்கு ஒதுக்கப்பட்டது என தெரியாது. நான் இந்த சொத்தை 25.07.1994–ல் வாங்கினேன். தாவா சொத்தை கிரயம் பெற ஒப்பந்தம் போடவில்லை நேரடியாக கிரயம் பெற்றேன். எத்தனை ரூபாய் பத்திரம் வாங்கினேன் என்று ஞாபகமில்லை. எத்தனை தாள் வாங்கி டைப் செய்தேன் என ஞாபகமில்லை. 04.00 மணிக்கு பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தேன். 1.25 லட்சம் ரூபாய்க்கு வாங்கினேன்.

8. யார் முன்னிலையில் பணம் கொடுத்தேன் என்றால் ஸ்ரீதர், ஸ்ரீஅரி ஆகியோர் இருந்தார்கள். என்ன ரூபாய் நோட்டுகளாக பணம் கொடுத்தேன் என்றால் 100 ரூபாய் நோட்டுகளாக பணம் கொடுத்தேன். எத்தனை கட்டு கொடுத்தேன் என்றால் 12–1/2 கட்டு கொடுத்தேன். வங்கியில் இருந்து எடுத்தேனா என்றால் இல்லை, எனது மனைவியின் 15 சவரன் நகையை விற்று, வெல்ல மண்டியில் 20,000/– வாங்கி, தேங்காய் மண்டியில் 20,000/– வாங்கி, பாக்கி நான் ரெடி செய்தேன்.

9. 15 சவரன் நகையை அம்பலால் சன்ஸ் கடையில் பதிவிற்கு 15 நாட்களுக்கு முன்பு விற்றேன், முனியப்பன் வெல்ல மண்டியில் பதிவிற்கு 20 நாட்களுக்கு முன்பு வாங்கினேன், கௌதம் தேங்காய் மண்டியில் பதிவிற்கு 10 நாட்களுக்கு முன்பு வாங்கினேன், தேதி, மாதம் நினைவில்லை.

(உணவு இடைவேளைக்காக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் மாலை 04.40 மணிக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது).

10. சொத்து வாங்குவதற்கு யாரிடம் இருந்து பத்திரங்களை விலைக்கு வாங்கினேன் என தெரியுமா என்றால் ஞாபகமில்லை. பத்திரத்தை யாரிடம் இருந்து வாங்கினேன் என்றும், எத்தனை ரூபாய் பத்திரம் என்றும், எத்தனை பக்கம் கொண்ட பத்திரம் என்றும் எனக்கு தெரியவில்லை சொல்வதிலிருந்து சொத்தை நான் கிரயம் வாங்கவில்லை என்பதும் கஜேந்திரன் கிரயம் வாங்கினார் என்பதும் தெரியவருகிறது என்றால் சரியல்ல. சொத்தை புரோக்கர் மூலம் வாங்கினேன் என்றால் இல்லை.

11. கிரயத்தொகையை பதிவு அலுவலகம் வெளியில் வைத்து கொடுத்தேன். கிரயப்பத்திரத்தில் சார்பதிவாளர் முன்னிலையில் கிரய பணம் பெற்றதாக குறிப்பிடப்பட்டு நான் தற்போது பதிவு அலுவலகம் வெளியில் வைத்து கொடுத்ததாக சொல்வதில் இருந்து நான் சொத்தை கிரயம் பெறவில்லை என தெரியவருகிறது என்றால் வெளியில் எண்ணிப்பார்த்து உள்ளே சென்று வாங்கி கொண்டீர்களா என்று கேட்டபோது வாங்கி கொண்டேன் என சொல்லி கையெழுத்து போட்டேன். ஆவணத்தில் உள்ளவாறு சார்பதிவாளர் முன்னிலையில் பணத்தை கொடுத்தேனா என்றால் இல்லை. பணத்தை ஸ்ரீதர், ஸ்ரீஅரி முன்னிலையில் கொடுத்ததற்கு அத்தாட்சி ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

12. சொத்தை கிரயம் வாங்கிய அன்றே சுவாதீனத்தில் எடுத்ததற்கு சுவாதீன ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கிரயம் வாங்கிய தேதியில் நானும் எனது சகோதரரும் ஒரே வீட்டில் வசித்து வந்தோம்

என்றால் சரியல்ல. கிரயம் வாங்கியபோது நான் மோடிக்குப்பத்தில் வசித்து வந்தேன். எனது அண்ணன் தட்டப்பாறையில் வசித்து வந்தார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தில் நான் எங்கு வசித்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மூங்கம்பட்டு. கிரயம் வாங்கிய தேதிக்கு நான் மூங்கம்பட்டில் வசித்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

13. நான் மோடிக்குப்பத்தில் வசிக்கவில்லை என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல இரண்டு வருடம் அங்கிருந்தேன். கிரய ஆவணத்தில் என்னை இன்னார் என்று நிரூபித்து கையெழுத்து போட்டவர் யார் என தெரியுமா என்றால் தெரியாது. கிரய ஆவணத்தில் நான் கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். எத்தனை கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சுமார் 7 முதல் 9 கையெழுத்து போட்டிருப்பேன். நான் கிரயம் செய்ததாக சொல்லும் தேதியில் பதிவாளர் அலுவலகம் வரவில்லை என்றாலும் கிரயப்பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் நான் 7 கையெழுத்துகள் போடவில்லை என்றாலும் சரியல்ல.

14. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் என்னுடைய கையெழுத்து உள்ளதா என்றால் உள்ளது. கிரய ஆவணத்தில் 7 முதல் 9 இடத்தில் என் கையெழுத்து உள்ளதா என்றால் இல்லை, ஒரு கையெழுத்து தான் உள்ளது. தாவா சொத்து உட்பட மற்ற சொத்து குறித்து சத்தியமூர்த்தி சொத்து வாங்கிய அனைவர் மீதும் அசல் வழக்கு 329/1996 என்ற வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான், சுமார் 11 பேர் மேல் வழக்கு போட்டுள்ளார். அந்த வழக்கில் தீர்ப்பு சத்தியமூர்த்திக்கு சாதகமாக வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பு குறித்த விவரத்தை இந்த நீதிமன்றத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

15. அந்த வழக்கு சம்மந்தப்பட்ட சொத்தை சுவாதீனம் எடுக்க சத்தியமூர்த்தி நிறைவேற்று மனு 86/2011 போட்டுள்ளார் என்றால் சரிதான். நிறைவேற்று மனுவில் சொத்தின் சுவாதீனத்தை அவரிடம் ஒப்படைத்து விட்டார்கள் என்றால் இல்லை. சத்தியமூர்த்தி சாதகமாக வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் சுவாதீனம் அவரிடம் போய்விட்டதால் அதை திரும்ப பெற நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லையா என்றால் என் சொத்தை எடுக்க அவர் வரவில்லை, அவரிடம் செட்டில்மெண்ட் பேசியிருக்கிறேன். என் சொத்தை எடுக்கவில்லை என்றால் செட்டில்மெண்ட் பேச அவசியமில்லை என்றால் சரியல்ல.

16. இன்றைய தேதிக்கு தாவா சொத்தின் சிட்டா மற்றும் அடங்கல் சத்தியமூர்த்தி பெயரில் உள்ளது என்றால் சரியல்ல, வெங்கடேச செட்டி

பெயரில் உள்ளது. சத்தியமூர்த்திக்கு தாக்கல் செய்த நிறைவேற்று மனுவில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக பிரதிவாதி கஜேந்திரன் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது உயர்நீதிமன்றம் அந்த வழக்கில் கொடுத்த உத்தரவு என்றால் ஆங்கிலம் எனக்கு தெரியாது. மேற்படி சி.ஆர்.பி. நம்பர் 4256/2024 வழக்கின் உத்தரவின் சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

17. எனது சொத்துக்கள் முழுவதையும் சத்தியமூர்த்தி சுவாதீனம் எடுத்துவிட்ட நிலையில் இந்நீதிமன்றத்தில் தாவாவை தாக்கல் செய்ய எனக்கு முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல, அவரிடம் செட்டில்மெண்ட் பேசி முடித்துவிட்டேன். 2014ஆம் ஆண்டே தாவா சொத்தை சத்தியமூர்த்தி சுவாதீனம் எடுத்துவிட்ட நிலையில் 2022 ஆம் ஆண்டு தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இருப்பதாக எனது சகோதரர் மீது வழக்குபோட முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல, அவர் சுவாதீனம் எடுக்கவில்லை என்னிடம் தான் சுவாதீனம் உள்ளது. நான் முன்னுக்கு முரணாக மாறுபட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

18. இதே நீதிமன்றத்தில் தாவா சொத்தை பிரதிவாதி அனுபவித்து வருவதாக எனக்கு எதிராக 2014–ல் உறுத்துக்கட்டளை வழக்கு போட்டார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணம் அந்த வழக்கின் தாவா நகல் என்றால் சரிதான். அதில் நான் பதில் போட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 எனது பதில் என்றால் சரிதான். அந்த பதிலுரையில் பாரா 4–ல் சத்தியவதி வகையறாவிடம் இருந்து கிரயம் வாங்கிய சொத்துக்களை குறித்து குடியாத்தம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சத்தியவதி உறவினர்கள் தாக்கல் செய்த வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்படி சொத்துக்களை குறித்து வருவாய் ஆவணங்களை மாற்ற இயலவில்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

19. பிரதிவாதி தாக்கல் செய்த தாவாவில் தாவா சொத்தை வைத்து ஸ்டேட் பேங்கில் கடன் வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பதிலுரையில் ஸ்டேட் பேங்க்கில் நாங்கள் சேர்ந்து கடன் வாங்கி கட்டினோம் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த கடனை கட்டியதற்கு ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்ன தேதியில், எவ்வளவு ரூபாய் கட்டினேன் என சொல்ல முடியுமா என்றால் 1998–ல் கட்டினேன், எனது பங்கு 42,000/– கட்டினேன். முழு கடனையும் பிரதிவாதி தான் கட்டினாரா என்றால் சரியல்ல, எனது பங்கை நான் தான் கட்டினேன்.

20. தாவா சொத்தை வைத்து மேற்படி கடன் வாங்கியதற்கு ஸ்டேட் பேங்க் வங்கி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு போட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி கடனை அடைக்க பிரதிவாதி வேறு ஒரு கடன் வாங்கி வங்கி மூலமாக மொத்த பணத்தையும் செலுத்தி மேற்படி கடனை அடைத்தார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.5 பதிலுரையில் பாரா 7–ல் தற்போது வாதி இப்பிரதிவாதி சத்தியவதி வகையறாவிடம் கிரயம் பெற்ற சொத்துக்களை அனுபவித்துக்கொண்டு, அவர் பெயரிலுள்ள அயிட்டம் 1 முதல் 6 வரையிலான வழக்கு சொத்தினையும் அடைய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

21. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.5 பதிலுரையில் பாரா 8–ல் சொல்லியுள்ள விவரம் உண்மையானது என்றால் சரிதான். இந்த தாவா சொத்து குறித்து தான் 2014–ல் அசல் வழக்கு எண்.49/2014 பிரதிவாதி தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.5 பதிலுரையில் அந்த தாவா சொத்தை நான் அனுபவிப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். சொத்து கஜேந்திரன் அனுபவத்தில் உள்ளதால் நான் அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அடங்கல் வெங்கடேசன் செட்டியார் பெயரில் உள்ளது.

22. தாவா சொத்தை நான் எப்போதும் அனுபவிக்கவில்லை என்றாலும் அதை நான் நேரடியாக கிரயம் பெறவில்லை என்றால் சரியல்ல. இந்த தாவாவை எதற்காக போட்டேன் என்றால் நான் வாங்கிய சொத்தை நான் அனுபவிக்கிறேன், அவர் வாங்கிய சொத்தை அவர் அனுபவிக்கிறார், தற்போது நான் வாங்கிய சொத்தை பிரதிவாதி மாற்றி கேட்பதால் வழக்கு போட்டுள்ளேன். பிரதிவாதி வாங்கிய சொத்தில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றும், நான் வாங்கிய சொத்திற்கு அவர் வரக்கூடாது என நான் தாவாவில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

23. 25.02.2017–ல் நானும் பிரதிவாதியும் ஊர் பெரியோர்கள் முன்னிலையில் சொத்தை மாற்றி கொண்டதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதனால் சொத்தை மாற்றிக் கொண்டதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சொத்து குறித்து சுமூகமான முடிவு எடுத்தால் முச்சிலிக்கா எழுதுவார்கள் என்றால் அதுபோல் எழுதவில்லை. தாவா சொத்தில் ஒருவருக்கொருவர் இடையூறு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு வியாத்திய மூலமே இல்லை என்றாலும் நான் எனது சகோதரரை துன்புறுத்த வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

24. வா.சா.ஆ.5 பதிலுரையில் சொத்தை பிரதிவாதி அனுபவிப்பதாக சொல்லியுள்ள நிலையில் இந்த வழக்கில் வியாத்திய மூலம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொத்தை அனுபவிக்கவில்லை என்றாலும் அடங்கல் உட்பட ஏனைய ஆவணங்களை தாக்கல் செய்யாததில் இருந்து நான் அனுபவத்தில் இல்லை என தெரியவருகிறது என்றால் சரியல்ல, யாருக்கும் ஆவணங்கள் இல்லை. சொத்தை அனுபவிப்பதாக தவறாக சொல்கிறேன் என்றாலும் அதன்மூலம் நான் உறுத்துக்கட்டளை கோரமுடியாது என்றால் சரியல்ல. ஏற்கனவே தாவா சொத்தை சத்தியமூர்த்தி சுவாதீனத்தில் எடுத்துவிட்டதால் இந்த தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் அனுபவ பாத்தியம் இல்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கை நடத்த எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு செலவுத்தொகையோடு இந்த தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.